Transport for NSW

# சாலைப் பாதுகாப்பு




## 40km/h பள்ளி வலையங்கள்

40km/h பள்ளி வலையங்கள் பள்ளிகளைச் சுற்றியுள்ள சாலைகளில் போக்குவரத்தை மெதுவாக்குகின்றன. குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் இருக்கும் நேரங்களிலும், இடங்களிலும் பள்ளிக்குச் செல்லும் மற்றும் வரும்போது அவர்களைப் பாதுகாக்க இது உதவும். குறைந்த வேக வரம்பு விபத்தின் அபாயத்தையும் சாத்தியமான தீவிரத்தையும் குறைக்கிறது.

40km/h பள்ளி வலையங்கள் காலை 8.00 மணி முதல் 9.30 மணி வரையிலும் மதியம் 2.30 மணி முதல் மாலை 4.00 மணி வரையிலும் செயல்படும். NSW இல் குறைந்த எண்ணிக்கையிலான நியமமற்ற பள்ளி வலைய நேரங்கள் உள்ளன. பள்ளிக் குழந்தைகளைப் பார்க்க முடியாவிட்டாலும், நிர்ணயிக்கப்பட்ட பள்ளி வலைய வேக வரம்பை கடைபிடிக்க வேண்டும்.

40km/h பள்ளி வலையங்கள் அனைத்து அறிவிக்கப்பட்ட பள்ளி நாட்களிலும் பணியாளர் மேம்பாட்டு நாட்கள் (மாணவர் வருகை தராத நாட்கள்) உட்பட செயல்படும். சில பள்ளிகள் வெவ்வேறு கால தேதிகளில் செயல்படலாம் என்றாலும், NSW அரசு நிர்ணயித்த பள்ளி காலங்களின் போது பள்ளி வலைய வேக வரம்புகள் பின்பற்றப்பட வேண்டும்.

பள்ளிப் பருவத் தேதிகளை பின்வரும் இணையதளங்களில் காணலாம்:

- **transport.nsw.gov.au/roadsafety**
- **education.nsw.gov.au**

40km/h பள்ளி வலையங்களைப் பற்றிய வாகன ஓட்டிகளின் விழிப்புணர்வை அதிகரிக்க, முக்கோண ‘டிராகனின் பற்கள்’ சாலை அடையாளங்கள் வாகனம் பள்ளி வலையத்திற்குள் நுழைவதைக் குறிக்கிறது.

நியமிக்கப்பட்ட பள்ளி வலைய வேக வரம்பு பின்பற்றப்படாவிட்டால் அபராதம் மற்றும் தகுதி குறைப்புப் புள்ளிகள் (demerit points) பொருந்தும். அபராதம் மற்றும் குறைபாடுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, **transport.nsw.gov.au** ஐப் பாருங்கள்

**குழந்தைகள் உங்களிடமிருந்து பாதுகாப்பான சாலைப் பயணப் பழக்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள், மேலும் அவர்கள் தனியாகப் பயணம் செய்யும் அளவுக்கு வளரும்போது அவற்றைக் கடைப்பிடிப்பார்கள்.**

சாலைச் சூழலில் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு **safetytown.com.au** இல் உள்ள குடும்பங்கள் (families) என்ற பகுதியைப் பார்வையிடவும்

தனித்துவக் குறியீடு 45095357 ஜூன் 2024 © NSW க்கான போக்குவரத்து

NSW GOVERNMENT

NSW சாலைகளில் பல உயிர்கள் பலியாகியுள்ளன.
**நமது இலக்கு பூச்சியம் ஆகும்.**

TOWARDS ZERO